அரசு தற்போது டெல்லியிலே ஆட்சியிலே இருக்கிறது. எண்ணெய் வள நிதி மீண்டும் துவக்கப்படவில்லை. அதிலே 27 ஆயிரம் கோடி ரூபாய் உபரிப் பணம் இருப்பதாகத் தெரிகிறது. அந்தப் பணத்தைக் கொண்டு இந்த டீசல், சமையல் எரிவாயு, பெட்ரோல் விலை உயர்வைத் தடுத்திருக்கலாம்; அந்த முயற்சியிலும் மைய அரசு ஈடுபடவில்லை என்பதனைச் சொல்லி, அளவு கடந்த இலாபம் வந்திருக்கிற நேரத்தில், கிட்டத்தட்ட 22,589 கோடி ரூபாய் எண்ணெய் வள நிறுவனங்கள் மூலம் மைய அரசு வருமானம் பெற்றிருக்கிறது. என்றாலும், விலை உயர்வை நிறுத்தாதது கண்டிக்கத்தக்கது.

அதுமட்டுமல்லாமல் O.N.G.C. 5 ஆயிரம் கோடி ரூபாய் இலாபத்தைப் பெற்றிருக்கிறது. 30 சதவிகித எண்ணெய் உள்நாட்டிலேயே உற்பத்தி ஆகிறது. இதற்கும் விலையை உயர்த்தி ஏழை மக்கள்மீது மைய அரசு இந்தச் சுமையை சுமத்தியிருப்பது மக்கள் விரோத அரசு, ஏழைகளுக்கு எதிரான அரசு மைய அரசு; அத்தகைய அரசுக்கு ஆதரவு தருகின்ற அமைப்புகளாக இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சிகள் மைய அரசிலேயே இடத்தைப் பெற்றுவிட்டு, அங்கே விலை உயர்வை நீங்கள் உயர்த்தி விடுகிறீர்கள். இங்கு வந்து குறையுங்கள், குறையுங்கள் விற்பனை வரியை என்று என்னிடம் போராடுவது மக்களை ஏமாற்றுகிற ஏமாற்று வித்தை எனக் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

(இ) குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கு குடும்ப அட்டை வழங்கப்பட நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கு குடும்ப அட்டை வழங்கப்படாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் கவன ஈர்ப்பாகவும், திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள் சிறப்புக் கவன ஈர்ப்பாகவும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இவற்றை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கின்றேன். இதுகுறித்துச் சுருக்கமாகப் பேச திரு. ஞானசேகரன் அவர்களை அழைக்கின்றேன். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு அமைந்த பிறகு ரேஷன் கார்டுகள் எல்லாம் வழங்கப்படும் என்று ஓர் அறிவிப்பைக் கொடுத்து அங்கன்வாடிப் பணியாளர்கள் மூலம் அந்த மனுக்களை எல்லாம், எல்லா இடங்களிலும் வாங்கி அதை process செய்துகூட இன்னும் யாருக்கும் ரேஷன் அட்டை வழங்கப்படவில்லை.

பொதுவாக அதற்கு முன்னாலேகூட சட்டமன்ற உறுப்பினர்கள் குறை தீர்க்கும் நாளன்று நாங்கள் போகிறபோதுகூட ஒவ்வொரு ஆண்டும் யாரெல்லாம் ரேஷன் அட்டை புதிதாக வேண்டுகிறார்களோ, அவர்களிடம் நாங்கள் மனுவை வாங்கி T.S.O. அவர்களிடமும், அதேபோல D.S.O. அவர்களிடமும் எல்லாவற்றையும் ஒப்படைத்து பல ஆண்டுகள் காத்திருந்தும்கூட, ஒரு ரேஷன் கார்டுகூட என்னுடைய வேலூர் மாவட்டத்திலே கொடுக்கப்படவில்லை.

குறிப்பாக, பழைய ரேஷன் கார்டு ஏதாவது surrender செய்து விட்டு வந்தால் அந்தக் கார்டைக் கொடுப்பார்கள். அல்லது யாராவது திருமணம் செய்துவிட்டு தனியாகப் பிரிந்து போனால் அதை split செய்து வேறு அட்டை கொடுப்பார்கள். புதிய அட்டைகள் வழங்கப்படவில்லை. சரி, அரசே அறிவித்தும்கூட இப்போது புதிய மனுக்களை வாங்கி அதை நீங்கள் process செய்துகூட இன்னும் ரேஷன் அட்டை வழங்கப்படாத ஒரு சூழல் தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கிறது. புதிய குடும்பம் வந்தவர்கள் அல்லது திருமணம் செய்து கொண்டவர்கள், இப்படிப்பட்டவர்களுக்கு ரேஷன் அட்டை கிடைக்காத ஒரு சூழல் பல ஏழையெளிய மக்களைப் பாதித்துக்கொண்டிருக்கிறது.

பிற்பகல் 1-55

நாங்கள் எல்லாம் கடந்த 3 ஆண்டுகளாக கொடுத்த மனுக்களை process செய்தவர்கள், நாங்கள் ELCOT-க்கு இப்பொழுதுதான் அதை lamination செய்வதற்காக அனுப்பியிருக்கிறோம், அட்டையே வரவில்லை, வரவில்லை என்ற பதிலையே 3 ஆண்டுகள் சொல்லித் தீர்த்தார்கள். இப்பொழுது பார்த்தால், இந்த ஆண்டுகூட ரேஷன் கார்டு, புதியதாக வழங்கப்படாமல் பழைய ரேஷன் கார்டுகளிலேயே ஒரு காகிதத்தை நுழைத்து இன்னும் ஓர் ஆண்டுக்கு அவர்கள் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற விவரம் கண்ட அட்டையை ஒட்டிக்கொள்வதற்கான ஒரு order-ஐ இப்பொழுது போட்டு இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்த ஆண்டுகூட நீங்கள் ரேஷன் அட்டை கொடுப்பதாகத் தெரியவில்லை. ஆகவே நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம் மனுக்களை வாங்கியவர்களுக்கு எப்பொழுது ரேஷன் கார்டுகளை நீங்கள் கொடுக்கப்போகிறீர்கள்? அங்கன்வாடிப் பணியாளர்களை இதிலே கொண்டுபோய் திணித்தீர்கள். இதற்காக ஒரு துறையே இருக்கிறது. Taluk Supply Officer இருக்கிறார். அதற்கு Revenue Inspector இருக்கிறார்கள். அதற்குத் தனியாக வருவாய்த்

துறை ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் போய் புலன் விசாரணை செய்து ஓரளவிற்கு உண்மை எது என்று கண்டுபிடிக்கலாம். ஆனால் அங்கன்வாடிப் பணியாளர்களிடம் நீங்கள் மனுக்களை வாங்குகிற பணியை ஒப்படைத்தீர்கள். பல இடங்களிலே அவர்கள் வாங்குவதையே மறுத்து விட்டார்கள். ஆகவே யாரெல்லாம் நியாயமாக மனுக்களைக் கொடுக்கிறார்களோ, அவற்றையெல்லாம் நீங்கள் பெற்று ரேஷன் கார்டுகளை இன்னும் ஒரு மாத காலத்திற்குள் கொடுப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா? அல்லது நீங்கள் ஏற்கெனவே அறிவித்தவாறு பழைய கார்டுகளிலே ஒரு காகிதத்தை நுழைத்துக்கொண்டு இன்னும் ஓர் ஆண்டுக்கு பொருட்களை வாங்குங்கள் என்று சொல்லிவிட்டு நீங்கள் இந்த ஆட்சி முடிகிற வரை ரேஷன் கார்டே கொடுக்கப்போவதில்லையா என்பதை வெளிப்படையாக இந்த அவையிலே அறிவிக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14-வது நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததற்குப் பிறகு தமிழக அரசு ஒரு நல்ல அறிவிப்பைக் கொடுத்தது; அதாவது தமிழகத்திலே ரேஷன் கார்டு இல்லாத மக்களுக்கு எல்லாம் ரேஷன் கார்டு வழங்கப்படும் என்று. அதன் அடிப்படையிலே சில நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. எனக்குத் தெரிந்த அளவிலே குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒவ்வொரு தாலுகாவிலேயும் 25,000, 30,000 மனுக்கள் பெறப்பட்டன. அது சம்பந்தமாக சில பரிசீலனைகளும் நடத்தப்பட்டன. ஆனால் இன்னும் ரேஷன் கார்டு யாருக்கும் வழங்கப்படவில்லை. ஏற்கெனவே 'எச்' முத்திரை குத்தப்பட்ட ரேஷன் கார்டுகளுடைய சொந்தக்காரர்களுக்கு அரிசி வாங்குவதற்கோ அல்லது மண்ணெண்ணெய் வாங்குவதற்கோ அல்லது சீனி வாங்குவதற்கோ முடியாத நிலை இருந்துகொண்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்று ரேஷன் கார்டு இருந்தால்தான் மண்ணெண்ணெய் வாங்க முடியும் என்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஏழை மக்களைப் பொறுத்த அளவிலே இன்று குறிப்பாக குடிசைகளிலே வாழ்ந்துகொண்டிருக்கிற மக்களுக்கு மின்சார வசதியில்லை. அவர்கள் இந்த மண்ணெண்ணெயைத்தான் நம்பி வாழவேண்டி இருக்கிறது. ஆகவே ரேஷன் கார்டு அவர்களுக்குக் கிடைத்தால்தான்

மண்ணெண்ணெயும், அதேபோன்று மற்ற பொருட்களையும் வாங்கிக்கொள்ள முடியும். ஏழை மக்களைப் பொறுத்த அளவிலே அவர்களுக்கு ரேஷன் கார்டு இருந்தால்தான் அரிசி பெறமுடியும் என்ற காரணத்தினால் ரேஷன் கார்டு கொடுப்பதற்கு விரைவிலே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டிருக்கிற காலதாமதம் என்பது மக்களுக்கு பெரிய ஏமாற்றத்தை அளிக்கிறது. அவர்கள் ஒரு மாத காலத்திலே ரேஷன் கார்டு கிடைக்கும் என்று நம்பினார்கள். ஆனால் ஏறத்தாழ 3 மாதங்கள் ஆகிவிட்டதற்குப் பிறகும் கிடைக்கவில்லை. ஆகவே நவம்பர் மாத இறுதிக்குள்ளே அனைவருக்கும் இந்த ரேஷன் கார்டுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2-00

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாட்டில் 152 கோடி குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளன. ஆயினும் தங்களுக்கு இன்னும் குடும்ப அட்டைகள் கிடைக்கப்பெறவில்லை என்று பல குடும்பத்தினர், (குறுக்கீடு) மன்னிக்கவும், தற்பொழுது தமிழ்நாட்டில் 1.52 கோடி குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு புழக்கத்தில் உள்ளன. ஆயினும் தங்களுக்கு இன்னும் குடும்ப அட்டைகள் கிடைக்கப்பெறவில்லை என்று பல குடும்பத்தினர் தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் முறையீடு செய்தனர். ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கடந்த 18-5-2004 அன்று, இதுவரை குடும்ப அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் குடும்ப அட்டை கோரி விண்ணப்பிக்குமாறு அறிவித்தார்கள். தற்போது குடும்பம் குடும்பமாக வசித்து வரும் நபர்கள், தங்கள் பெயரை நீக்கி, நீக்கல் சான்றுடன் உரிய இடத்தில் விண்ணப்பித்து புதிய குடும்ப அட்டை பெற வழிவகை உள்ளது. ஆனால் சில அப்பாவி மக்கள் குடும்ப அட்டை பெற வழிவகை தெரியாதுள்ள நிலையில் இவ்வாறான இடர்பாடுகளையும், காலதாமதத்தையும், வழிவகைகளையும் அறியாமலோ அல்லது செய்யத் தெரியாமலோ இருந்திருக்கலாம் என்று கருதி, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இவ்வனைத்துப் பணிகளையும் அரசே செய்யும் என்று ஆணை பிறப்பித்தார்கள்.

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2004 நவம்பர் 19

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

தாய் அட்டையிலிருந்து பெயரை நீக்கி ஆவண மாற்றத்தை அரசே செய்யும் என்றும், எங்கே தாய் அட்டை உள்ளது என்ற விவரத்தை மட்டும் தெரிவித்தால் போதும் என்றும், குடும்ப அட்டை பெறவே கஷ்டப்படும் அப்பாவி மக்களுக்கு எளிதில் குடும்ப அட்டை கிடைக்க, எளிய வெள்ளைக் காகித விண்ணப்பத்தில் மட்டும் வீட்டிற்கு அருகில் உள்ள அங்கன்வாடி மையத்திலேயே - மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பு எடுத்துக்கொள்ள வேண்டும் - விண்ணப்பிப்பதற்கு எளிதாக இருக்க வேண்டும் என்பதற்காக, வீட்டிற்கு அருகிலே இருக்கின்ற அங்கன்வாடி மையத்திலோ, மதிய உணவு மையத்திலோ கொடுத்தால் போதும் என்று மிக எளிதாக்கி, இதன்மூலம் தமிழ்நாட்டில் குடும்ப அட்டை இல்லாதவர்களே இல்லை என்ற நிலையை ஏற்படுத்த தீவிர முயற்சிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்துள்ளார்கள்.

புதிய குடும்ப அட்டை கோரும் விண்ணப்பங்களைப் பெறும் பணிக்காக ரூபாய் 3 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இவ்வாறு எடுத்த முயற்சிகளின் பயனாக 49 இலட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இவற்றை ஆய்வு செய்ததில், மீள விண்ணப்பித்தவர்கள், ஒரே குடும்பத்திலிருந்து பிரிந்து வந்தவர்கள், ஒரே குடும்பத்திலிருந்து தனித் தனியாக விண்ணப்பித்தவர்கள், தவறான தகவல் கொடுத்து விண்ணப்பித்தவர்கள் மற்றும் இரண்டாவது அட்டை பெற முயற்சிப்பவர்களும் கண்டறியப்பட்டு, அவ்விண்ணப்பங்கள் நீக்கம் செய்யப்பட்டு, தீவிர ஆய்விற்குப் பின்பு, 38 இலட்சம் விண்ணப்பதாரர்கள் குடும்ப அட்டை பெறத் தகுதி வாய்ந்தவர்கள் என்று கண்டறியப்பட்டு, இந்த விண்ணப்ப விவரங்களைக் கணினியில் பதிவு செய்து கணினி மூலம் குடும்ப அட்டைகள் அச்சிட்டு வழங்க போர்க்கால அடிப்படையில் இரவு பகலாகப் பணிகள் நடைபெற்று வருகின்றன. புதிய குடும்ப அட்டை அச்சிடும் பணிக்காக ரூபாய் 4 கோடியே 43 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணி டிசம்பர் மாத இறுதிக்குள் முடிக்கப்பட்டு, அனைத்து தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கும் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட வேண்டும் என்கிற உத்தரவை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இட்டிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

2004 நவம்பர் 19] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

எதிர்பார்த்ததற்கு அதிக அளவில் விண்ணப்பங்கள் பெறப்பட்டதால், அவை அனைத்தையும் ஆய்வு செய்து குடும்ப அட்டைகள் அச்சிட சிறிது கால அவகாசம் கூடுதலாக எடுத்துக்கொள்ளப்பட்டது. எனினும், டிசம்பர் மாத இறுதிக்குள்ளாக தகுதி படைத்த 40 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு, குடும்ப அட்டைகள் புதியதாக விநியோகிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் தற்போது உணவு மானியமாக ரூபாய் 775 கோடி என்ற அளவில் (குறுக்கீடுகள்) அண்ணா, கொஞ்சம் கவனியுங்கள். தமிழ்நாட்டில் தற்போது உணவு மானியமாக ரூபாய் 775 கோடி என்ற அளவில் உள்ளது. வேறு எந்த மாநிலத்திலும் இந்த அளவு மானியம் வழங்கப்படவில்லை என்பதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இந்தியாவிலேயே அரிசி மிகக் குறைந்த விலையில் ஒரு கிலோ அரிசி 3 ரூபாய் 50 காசு என்கிற வகையில் குடும்ப அட்டைகளுக்கு வழங்குகிற ஒரே மாநிலம், தமிழகத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆளுகிற இந்த மாநிலம் என்று சொல்வதிலே நான் பெருமைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆந்திரப் பிரதேசத்திலே 1 கோடியே 50 இலட்சத்து 2 ஆயிரம் குடும்ப அட்டைகளை இரண்டு கூறுகளாகப் பிரித்து, 5 ரூபாய் 25 பைசா என்று வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ள மக்களுக்கும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ள மக்களுக்கு 9 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்கிற வகையிலேயும் உணவுப் பொருளானது வழங்கப்படுகிறது, அரிசி வழங்கப்படுகிறது.

அருகில் இருக்கின்ற கர்நாடக மாநிலத்திலே 1 கோடியே 16 இலட்சத்து 49 ஆயிரம் குடும்ப அட்டைகள் மூன்று கூறுகளாகப் பிரிக்கப்பட்டு, 3 ரூபாய் 50 பைசா என்றும், 6 ரூபாய் 15 பைசா என்றும், இரண்டு விலைப் பட்டியல்க்ளிலே வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ள மக்களுக்கு அரிசி வழங்கப்படுகிறது. வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள மக்களுக்கு கிலோ அரிசி ரூபாய் 9 வீதமாக அருகிலே இருக்கின்ற கர்நாடக மாநிலத்திலே வழங்கப்படுகிறது.

காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்கிற கேரள மாநிலத்திலே 63 இலட்சத்து 74 ஆயிரம் குடும்ப அட்டைகளுக்கு, வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ள மக்களுக்கு, 6 ரூபாய் 20 பைசா என்றும், வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள மக்களுக்கு 8 ரூபாய் 90 பைசா என்றும் அரிசி வழங்கப்படுகிறது.

சிறப்புக் கவன ஈர்ப்பு

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2004 நவம்பர் 19

மேற்கு வங்க மாநிலத்திலே 1 கோடியே 60 இலட்சத்து 11 ஆயிரம் குடும்ப அட்டைகளிலே வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ள மக்களுக்கு என்று ஒரு பிரிவாகப் பிரித்து 6 ரூபாய் 15 பைசா என்றும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ள மக்களுக்கு 9 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, ரேஷனிலே, நியாயவிலைக் கடைகளிலே வழங்கப்படுகிறது. ஆனால், இந்தியாவிலே ஒரே ஒரு மாநிலம், 2 இலட்சத்து 5 ஆயிரம் டன் அரிசியை, 1 கோடியே 12 இலட்சத்துக்கு மேற்பட்ட குடும்ப அட்டைகளுக்கு, வறுமைக் கோட்டிற்குக்கீழ் என்றும், மேல் என்றும் பிரிக்காமல், ஒவ்வொரு ஆண்டிற்கும் 775 கோடி ரூபாய் செலவிலே, அரசினுடைய மானியப் பணத்திலே அரிசி வழங்குகிற ஒரே மாநிலம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்கிற தமிழ் மாநிலம் என்பதனை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-05

புதிய குடும்ப அட்டைகள் வழங்குவதன் மூலம்-இதற்கு மேலும் கூடுதலாக புதிய குடும்ப அட்டைகள், புதிதாக 40 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்குவதன் மூலமாக-அரசுக்கு ரூபாய் 775 கோடி இதுவரை மானியமாக ஆகிவந்த தொகைக்கு மேலாக, இன்னும் கூடுதலான தொகையை மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையிலே இருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கூடுதலாக மண்ணெண்ணெயை மத்திய அரசு வழங்கினாலொழிய, புதிதாக வழங்க இருக்கிற குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்க இயலாத நிலையிலே மாநில அரசானது உள்ளது. ஏனெனில், பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெயை முழுமையாக மத்திய அரசு தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. ஏற்கெனவே தமிழ்நாட்டிற்குத் தேவையான மண்ணெண்ணெயை மைய அரசு மாதாமாதம் குறைத்துக்கொண்டே வருகிறது. ஆகவே, நமக்குத் தேவையான அளவு மண்ணெண்ணெய் கிடைக்கப் பெறவில்லை என்ற நிலை தமிழ்நாட்டிலே உள்ளது. நடப்பு ஆண்டில் 74,833 கிலோ லிட்டரிலேயிருந்து 58,392 கிலோ லிட்டராக அளவீட்டினைக் குறைத்து மத்திய அரசானது ஒதுக்கீடு செய்துள்ளது. இதனால்தான் தமிழ்நாட்டில் மண்ணெண்ணெய் தற்போது தட்டுப்பாட்டில் உள்ளது. மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டை அதிகரிக்க மத்திய அரசை, எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய ஆளுமைத் திறனிலே இருக்கிற மத்திய அரசை பலவகையிலும் வலியுறுத்தி பெற்றுக் கொடுப்பார்களேயானால், புதிதாக வழங்க இருக்கிற 40 இலட்சம் குடும்ப

அட்டைகளுக்கும் மண்ணெண்ணெய் வழங்க ஏதுவாக இருக்கும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய துரிதக் கண்காணிப்பாலும், ஆணையின் பெயரிலும் இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். குடும்ப அட்டைகள் டிசம்பர் மாதம் முதல் தேதியிலே தொடங்கி இறுதிக்குள் வழங்க உள்ளது. அப்படி புதிதாக வழங்கப்பட இருக்கிற குடும்ப அட்டைகளுக்குரிய மண்ணெண்ணெயை நீங்கள் அங்கம் வகிக்கிற மத்திய அரசிலேயிருந்து பெற்றுக் கொடுத்தால், புதிதாக வழங்க இருக்கிற குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படும் என்பதைப் பணிவோடு சொல்லி அமர்கிறேன். அதுவரை மண்ணெண்ணெயைத் தவிர மற்ற அனைத்துப் பொருட்களும் வழங்கப்படும்.

5. கவன ஈர்ப்பு

சென்னை குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க தெலுங்கு–கங்கா திட்டம் மூலம் நிரந்தரமாகத் தண்ணீர் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சென்னை குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க தெலுங்கு-கங்கா திட்டத்தின் மூலம் நிரந்தரமாகத் தண்ணீர் பெறவேண்டிய அவசியம் குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

மறைந்த தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், மறைந்த ஆந்திர முதல்வர் மாண்புமிகு